DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FTC), THENI.

# MCOP. No. 155/2021

Deposition of Witness : PW3

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.செல்வமணி | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | திரு.கோவிந்தராஜ் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.12.2024

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**ம.த.கு.வி.:**

கேள்வி : விபத்து சமயத்தில் இறந்து போன முருகன் லாரியில் எந்த பக்கம் அமர்ந்து இருந்தார் என்றால் ?

பதில் : ஓட்டுநரில் இடது பக்கம்.

கேள்வி : லாரியில் கேப்பினில் எத்தனை நபர்கள் பயணம் செய்தீர்கள்?

பதில் : கோவிந்தராஜனும், முருகனும் ஓட்டுநரின் பக்கத்தில் அமர்ந்து இருந்தார்கள்.

கேள்வி : லாரியில் ஏற்றிவந்த மாட்டு சாணம் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் ?

பதில் : தெரியாது.

கேள்வி : உங்களை வேலைக்கு அழைத்து சென்றது யார் ?

பதில் : இறந்து போன முருகன்.

கேள்வி : வண்டியில் பாரம் தாங்காமல்தான் வண்டி கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது என்றால் ?

பதில் : சரியல்ல.

கேள்வி : விபத்து சமயத்தில் 407 வேனை ஓட்டிய ராஜேஷ்குமார் வாகனத்தை

அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டியபோது அதனை மெதுவாக ஓட்டுங்கள் என கூறினீர்களா என்றால் ?

பதில் : ஆமாம்.

கேள்வி : இந்த விபத்தில் சொல்லப்பட்ட வாகனம் சரக்கு வாகனம் என்பதால் அதில் பயணியாக பயணம் செய்ததால் காப்பீடு மீறல் செய்யப்பட்டுள்ளது என்றால் ?

பதில் : சரியல்ல.

கேள்வி : நீங்கள் முருகன் வீட்டார் சொல்லிதான் சாட்சியம் அளிக்கிறீர் என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : உண்மையை மறைத்து முருகன் வீட்டார் கேட்டுக்கொண்டதற்கு ஏற்ப பொய் சாட்சியம் அளிக்கிறீர் என்றால் ?

பதில் : சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 16.12.2024 அன்று திங்கட்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2024.12.16 19:32:04 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
16.12.2024.